**புதுச்சேரி நகராட்சி**
**வருவாய் பிரிவு-2**
**புதுச்சேரி**
********

தேதி:10.07.2021

எண்: 1004 /பு.ந/வ.அ.2./அ.3/2021

## செய்திகுறிப்பு

புதுச்சேரி நகராட்சி 2021-2022-ஆம் ஆண்டுக்கான தினசரி அடிகாசு வரிவசூலிக்கும் பணி தனியாரிடம் மின்னனு ஏலம் மூலம் குத்தகை 01.07.2021 முதல் புதுச்சேரி நகர மன்ற தனிஅதிகாரியின் ஒப்புதல் பெற்று வரி வசூல்செய்ய குத்தகைதாரரிடம் விடப்பட்டுள்ளது.

இதன் அடிக்காசு வரி வசூலிக்கும் கட்டண விவரங்கள் கீழ்கண்டவாறு

| வ.எண் | விபரம் | ரூ. |
|---|---|---|
| (அ). | குபேர் அங்காடி (பெரிய அங்காடி) பகுதியில் அடிக்காசு ஒரு சதுர மீட்டருக்கு | 20.00 |
| (ஆ). | இதர அங்காடிப் பகுதியினுள் தரையில் பரப்பி வைத்து விற்கப்படும் பொருட்களுக்கு ஒரு சதுர மீட்டருக்கு | 15.00 |
| (இ). | அங்காடிப்பகுதிகளுக்கு வெளியே பொது வீதிகளின் ஓரங்களில் விற்கப்படும் பொருட்களுக்கு ஒரு சதுர மீட்டருக்கு | 10.00 |

இதன் தொடர்பாக மற்ற பகுதியில் வியாபாரம் செய்யும் அடிக்காசு வியாபாரிகள் அவர் அவர்கள் செலுத்த வேண்டிய அடிக்காசு தொகையை அந்தந்த குத்தகை தாரர்களுக்கு முறையாக செலுத்தி புதுச்சேரி நகராட்சிக்கு முழு ஒத்துழைப்பு நல்கி வரும் நிலையில், குபேர் அங்காடியில் அடிக்காசு வியாபாரம் செய்யும் அடிகாசு வியாபாரிகள் ஒரு சிலர் மட்டும் நகராட்சியின் உரிமம் பெற்ற குத்தகைதாரர்கள் மற்றும் நகராட்சி ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட அடிக்காசு தொகையை தர மறுத்து நகராட்சியின் வரி வசூலிக்கும் பணியில் தடை ஏற்படுத்துகின்றனர். ஆகையால், நகராட்சியின் சார்பாக அடிக்காசு வசூல் செய்யும் குத்தகைதாரரிடம் மேற்கூறியுள்ள நிர்ணயிக்கப்பட்ட அடிக்காசு தொகையை செலுத்தி அதற்கான ரசீதை பெற்றுக்கொண்டு நகராட்சிக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், நிர்ணயிக்கப்பட்ட அடிக்காசு தொகையை செலுத்த மறுக்கும் அடிக்காசு வியாபாரிகளின் மீது புதுச்சேரி நகராட்சியின் சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அடிக்காசு வரி செலுத்த மறுக்கும் அடிக்காசு கடைகளில் உள்ள பொருட்கள் பறிமுதல் செய்வதோடு அந்த கடைகளும் அகற்றப்படும் என்பது தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**இப்படிக்கு,**

**(S. சிவக்குமார்)**
**ஆணையர்**